
தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் - தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன

# மாணவர்களின் "கலர்ஸ் ஆப் கோலிவுட்" குறும்படம்!

## 16–வது சர்வதேச ஆவணம் – குறும்படப் போட்டிக்குத் தேர்வு!

சென்னை, ஜூலை 27–

16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி" (*Colours of Kollywood A Melanin Deficiency*) என்ற ஆவண குறும்படம் திரையீட்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.




16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டி கேரளாவில் 26 ஜூலை 2024 முதல் 31 ஜூலை 2024 வரை நடைபெற்று வருகிறது. இந்த சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைக்கலைஞர்கள் இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து எண்ணற்ற குறும்படங்கள் போட்டியிட்டனர்.

இதில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளங்கலை காட்சிக் கலை (*Bachelor of Visual Arts*) மாணவியான செல்வி.பரோசலில் இயக்கிய ஆவண குறும்படம் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி" (*Colours of Kollywood A Melanin Deficiency*), 22 ஆவண குறும் படங்களில் ஒன்றாக திரையீட்டிற்காக அதிகாரப்பூர்வ பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி ஆவணப் படம் வெள்ளை சருமத்தில் மீதான விருப்பம் இந்தியர்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளது, தமிழ் சினிமாவும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களுடனான உரையாடல் மூலம் இந்த ஆவணப்படம் இதை ஆய்வு செய்கிறது. குறிப்பாக தமிழ் நடிகைகள் குறித்தும் இந்த ஆவணப்படம் பேசுகிறது.

இந்த ஆவணக்குறும்படத்தில் தேசிய விருது பெற்ற இயக்குநரான க. ஹரிஹரன், விளம்பர திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் நரேஷ் நில், சர்வதேச விருது பெற்ற நடிகை மியா மெல்சர் மக்கள் தொடர்பாளரான செல்வி. கவிதா இம்மானுவேல், ஜே.என்.யூ. மாணவியான செல்வி ஹருஷிக்கா, திரைப்பட இயக்குநர் மற்றும் விரிவுரையாளர் மணிஷங்கர் நாராயணன் உள்ளிட்ட பலர் தங்களது கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

இந்த ஆவணக்குறும்படத்தை இந்நிறுவன மாணவர்களான செல்வி பரோசலில் இயக்கியுள்ளார். ஒளிப்பதிவை செல்வன் அக்ஷய் பரூனோன் என்பவரும், ஆடியோகிராப்பியை சுப்பிரமணியபாரதி என்பவரும், படத்தொகுப்பை செல்வன் கோபிகிருஷ்ணன் என்பவரும் எண்மிய இடைநிலை பணிகளை செல்வன் அருண்ராஜ் என்பவரும் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பணிகளை செல்வின் தக்ஷின் என்பவரும் கையாண்டுள்ளனர்.

இந்த ஆவணக்குறும்படத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தயாரித்ததாகும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (26.7.2024) தலைமைச் செயலகத்தில், Rubiks Cube விளையாட்டுப் போட்டியில் Asia Records, India Book of Records, Ingenious Charm World Records போன்ற பல்வேறு சாதனைகளை படைத்தமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை செல்வி எம். லக்ஷிதா காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது தாய் திருமதி ஏ.மோனிஷா, சகோதரர் செல்வன் ஆனந்த் மற்றும் பயிற்சியாளர் செல்வி பிந்து பிரியங்கா ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# சென்னை கிழக்கு - வடக்கு - வடகிழக்கு மாவட்டம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 27–

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தயாநிதிமாறன் எம்.பி. தலைமையில், பி.வில்சன், எம்.பி, டாக்டர்.கலாநிதி வீராசாமி.எம்.பி, மேயர் பிரியா ராஜன் ஆர்.டி.சேகர். எம்.எல்.ஏ, மாதவரம் எஸ். சுதர்சனம். எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பாஜக அரசை கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் ஆணையேற்று சென்னை கிழக்கு– வடக்கு– வடகிழக்கு மாவட்ட திமுக இணைந்து நடத்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

2024 - 2025 ஆம் ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய திருநாட்டிற்



கான நிதிநிலை அறிக்கையாக இல்லாமல், மோடி தலைமையிலான மைனாரிட்டி ஒன்றிய அரசு தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதிகளை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கும் வகையில் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது

தமிழ்நாடு சந்தித்த 2 தொடர் இயற்கை பேரிடர் இழப்புகள், மெட்ரோ ரயில் திட்டம் ஆகியவற்றிற்கு நிதி அவசியம் வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்– கழக தலைவர் தளபதி அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு மட்டுமே நிதிகளை வாரி வழங்கி உள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் இப்படி மாற்றான் தாய் மனப்பான்மையோடு தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் பாசிச பாஜக ஒன்றிய அரசை கண்டித்து கழகத் தலைவர் ஆணையேற்று சென்னை கிழக்கு வடக்கு வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் 27/07/2024 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மூன்று மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், ப தாயகம் கவி, அ வெற்றியழகன், இ பரந்தாமன், ஜெ ஜெ எபினேசர், ஐட்ரிம்ஸ் ஆர் மூர்த்தி, கே பி சங்கர் மற்றும் மாநில நிர்வாகிகள், முன்னாள் –இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், மண்டல குழு தலைவர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக - வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக செயல் வீரர்கள் முன்னோடிகள் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவளூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று உடனடியாகத் தீர்வு கண்டு பயனாளிகளிடம் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் வருவாய் கோட்டாட்சியர் வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார், துணை பெரும் தலைவர் திருமதி திவ்ய பிரியா இளமது மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் எல்.தயாளன், சித்ரா பாபு, கமலக்கண்ணன், ஏழுமலை உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

